500-வது இதழ் சிறப்பு மலர்!
ராணி காமிக்ஸ்
முகமூடி வீரர்
மாயாவி
விரட்டியடிக்கும்...
கடல் பூதம்
வண்ணப் படக்கதை
இரண்டு படக்கதை
ரூ.5

ராணி காமிக்ஸ் –500
(மாதம் இருமுறை இதழ்)
ஏப்ரல் 16, 2005.

<2A4

இந்திய ரன் குவிப்பு

முதலிடத்தில் தெண்டுல்கர்!

கொல்கத்தாவில் நடந்த டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தெண்டுல்கர் 10 ஆயிரம் ரன்னை கடந்தார். பாகிஸ்தானுக்கு எதிராக பெங்களூரில் நடந்த 3–வது டெஸ்டிலும் ஒரு புதிய சாதனை மகுடத்தை எட்டினார், சச்சின். டெஸ்டில் அதிக ரன் குவித்த இந்தியர் என்ற பெருமை அது.

5 ரன் எடுத்தால் புதிய சாதனை இலக்கை தொட முடியும் என்ற நிலையில் தெண்டுல்கர் 16 ரன் எடுத்து அந்த சாதனையை எட்டினார். மொத்தம் அவர் 10 ஆயிரத்து 134 ரன் குவித்து கவாஸ்கரின் சாதனையை (10 ஆயிரத்து 122 ரன்) முறியடித்தார்.



சாதனைப் புயல் சச்சின் தெண்டுல்கர்

உலக அளவில் அதிக ரன் குவித்த 3–வது வீரராக தெண்டுல்கர் உள்ளார். முதல் இடத்தில் இருக்கும் ஆஸ்திரேலிய வீரர் ஆலன் பார்டர் 11 ஆயிரத்து 174 ரன் எடுத்துள்ளார். 2–வது இடத்திலும் ஆஸ்திரேலிய அணியின் வீரர் ஸ்டீவ்வாக் உள்ளார். அவர் எடுத்த ரன் 10 ஆயிரத்து 927.

(படக்கதையைப் படித்துவிட்டு, உங்கள் கருத்தை எழுதி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி: **ஆசிரியர், "ராணி காமிக்ஸ்", சென்னை–600 007.)**

முகமூடி வீரர் மாயாவி தூள்பரத்திய மர்மப் புதையல் படித்தபோது எனது இதயம் 'லப் டப்' என அடித்துக் கொண்டது! அவ்வளவு விறுவிறுப்பு!!

ந. கார்த்திகேயன், பவானி.

'மண்டை ஓடு குகை'யில் இருக்கும் புதையலை தேடிப் போன சிறைக் கைதிகளான ஜேம்ஸ், ஆண்ட்ரூ, பீட்டர் ஆகிய கயவர்களை மாயாவி பந்தாடியது மிக அருமை!

தங்கராஜ், குரோம்பேட்டை.

'மண்டை ஓடு குகை' முன் மாயாவி சண்டை போடும் அட்டைப் படத்துக்கு ஒரு சபாஷ்!

வி. முத்து, சங்கராபுரம்.

ஆர்தர் மன்னனின் வாள், ரோம மன்னர் சீசரின் மணிமுடி, அலெக்சாண்டர் பயன்படுத்திய தட்டு என அழகிய பொருள்களை மாயாவியின் கருவூலத்தில் பார்க்க முடிந்தது. அது அபூர்வ நகை களஞ்சியம். அதுக்கே 5 ரூபாய் கொடுக்கலாம்!

ரம்யா, திருமருகல்.

மாயாவியிடம் நாடகமாடி கருவூலத்தை கொள்ளையடிக்கப்போன சிறைக் கைதியை தர்மஅடி 'விருந்து' கொடுத்து உபசரித்த மாயவிக்கு ஜே!

பி. நிவாஸ், பைரோஸ், திருப்பூர்.

500-வது இதழ் என்ற சாதனைக் கல்லை தொட்ட ராணி காமிக்சுக்கு எனது வாழ்த்துகள்!

பெருமாள், கோடங்கிபாளையம்.

முத்த மீன்கள் செய்தியும் படமும் என்னை கிறங்கடித்தது. முத்தமிடும் மீன்களின் அழகே ரசனைக்குரியது. அது, காதலர் நாளில் அமோக விற்பனையானதில் ஆச்சரியத்துக்கே இடமில்லை.

இ. அருணாசலம், பழவூர்.

கிரிக்கெட் போர்— தொலைக் காட்சி விளம்பர செய்தி ஆபூர்வமானது. ரசனைக்குரியது.

விக்னேஸ்வரன், நிலக்கோட்டை.

ராணி காமிக்சின் முதல் இதழான 'அழகியைத் தேடி' (007) முதல் 500-வது இதழ் கடல் பூதம் (மாயாவி)வரை தொடர்ந்து படித்த பெருமை எனக்கு உண்டு. அந்த சாதனையின் பெருமை ராணி காமிக்சுக்கு சேரும்!

சரவணக்குமார், காளிபாளையம்.

காதால் பலூன் ஊதிய செய்தி பயனுள்ளது. அறிவுப்பூர்வமானது.

ந. மோகன்குமார், கிணத்துக்கடவு.

முகமூடி வீரர் **மாயாவி**

போராடும்

கடல் பூதம்





நடுக்காட்டில் ஒரு நாடு. டோகண்டா என்று பெயர். அங்கு பழங்குடியினர் வாழ்ந்தார்கள். கடலில் மீன் பிடிப்பது அவர்களின் தொழில். ஒரு கடல் தேவனை அவர்கள் வழிபட்டார்கள்.
கடல் தேவனே! நீதான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்!
ஒருநாள் ஒரு முத்துச்சிப்பி கிடைத்தது.
ஆ! கறுப்பு முத்து!
இது கடல் தேவனுக்கு!
ஒருநாள் கடற்கரை ஓரமாக ஒரு கப்பல் நின்றது.
இன்றைக்கு எப்படியாவது கறுப்பு முத்துகளை கைப்பற்றிவிட வேண்டும், டாட்!
முயற்சி செய்வோம் ஓசி!

டாட், ஓசி இருவரும் ஊருக்குள் வந்தார்கள்.
பார்த்தீர்களா? கண்ணைப் பறிக்கும் பொன் நகைகள்!
என்ன விலை?
விலை கொஞ்சம்தான்! ஒன்றுக்கும் உதவாத கறுப்பு முத்துகளைக் கொடுத்து, வாங்கிக் கொள்ளுங்கள்!
காட்டுவாசிகள் மறுக்க, ஏமாற்றத்துடன் திரும்பினார்கள்!
நமது வலையில் அவர்கள் விழுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை!

கறுப்பு முத்துகளை எடுக்கிறேன் என்று நிறையச் செலவு வைத்துவிட்டாய்!
தங்க நகைகளைக் காட்டி கறுப்பு முத்துகளை வாங்கிவிடலாம் என்றாய். அதுவும் நடக்கவில்லை!
அட, தள்ளுங்க ஒசி! விலை மதிப்பில்லாத கறுப்பு முத்துகள் எப்படியும் நம் கைக்கு வந்துவிடும்!

டாட்! இதுதான் நமது கடைசி முயற்சி!
நம்பிக்கையுடன் இருங்கள், ஓசி!
மீண்டும் நகைகளுடன் வந்தார்கள்!
பார்த்தீர்களா? எல்லாம் மணிமாலைகள்!
விலை மதிப்பில்லாதவை!
அழகாகத்தான் இருக்கு! ஆனால், செயற்கை மணிகள்!

கடல் அன்னை எங்களுக்குத் தந்த கறுப்பு முத்துகள்!
கறுப்பு முத்துகளுக்கு விலை கிடையாதே!
ஆனாலும், கறுப்பு முத்துகளுக்குப் பதில் மணிமாலைகள் தருகிறோம்!
கறுப்பு முத்துக்களை மாற்றிக் கொள்ள நாங்கள் தயாராக இல்லை!
கறுப்பு முத்துகள் எங்களுக்குக் கடல் அன்னை கொடுப்பவை! கடல் தேவனுக்குக் காணிக்கை

ஒவ்வொரு முத்தும் இலட்சம் பெறுமே!
இவ்வளவு முத்துகள் இருக்கின்றன! எங்களுக்குக் கொஞ்சம் தாருங்கள்!
தொடாதே! கடல் தேவனுக்குக் காணிக்கையாகப் படைத்த முத்துகள் அவை!
அந்த முத்துகளை எடுப்பவர்களை கடல் தேவன் கொன்றுவிடுவான்
நான் எடுக்கவில்லை! பார்க்கத்தான் செய்தேன்!
புது ஆள், தெரியாமல் முத்துகளை தொட்டுவிட்டான்! மன்னித்துவிடுவோம்!

இருவரும் தங்களின் கப்பலுக்குத் திரும்பினார்கள்.
நமக்கு முத்துகள் கிடைக்கும் என்று நினைக்கிறாயா, டாட்?
நிச்சயம் கிடைக்கும், ஓசி!
கனவு காணு கிறாயா?
அன்று மாயாவி டோகண்டாவுக்கு வந்தார்.
இங்கே இரண்டு புதியவர்கள் வந்தார்கள். மாயாவி!
அவர்கள் கறுப்பு முத்துகளை எடுத்துப்போக முயற்சித்தார்கள்!
வெளி ஆட்களுக்குக் கறுப்பு முத்துகளை காட்டக்கூடாது!


தலைவரே! இங்கே எல்லாம் எப்படியிருக்கிறது?
நன்றாக இருக்கிறோம்! மீன்தான் போதிய அளவு கிடைக்கவில்லை!
இன்னும் துடுப்புகளையே நம்பிப் பயனில்லை! எந்திரப் படகுகள் வாங்குங்கள்!
கறுப்பு முத்துகளை விற்று எந்திரப் படகு வாங்கலாம்!
கறுப்பு முத்துகள் கடல் தேவனுக்குச் சொந்தம்!

நீங்கள் கடல் தேவனின் உண்மையான பக்தர்கள்!
கடல் தேவன் உங்களுக்கு உதவவே விரும்புவான்!
என்றாலும் எங்களுக்குப் பயமாக இருக்கிறது!
அதேநேரம்...
ஒசி! அறைக் கதவை பூட்டிக்கொண்டு என்ன செய்கிறாய்?
கதவு திறந்தது.
ஏய்! இது என்ன வேஷம்?
பார்த்தால் தெரியவில்லை? நான்தான் கடல் தேவன்!

அவர்களை ஏமாற்றித்தான் கறுப்பு முத்துகளைப் பறிக்க வேண்டும்!
நான் கடலுக்கு அடியில் இருப்பேன்.
கடல் தேவன் என்று உன்னை நினைத்து விடுவார்களா?
உன் வேஷம் கலைந்தால் உயிருக்கே ஆபத்து!
கடல் முத்துகள் கோடி பெறும்! உயிருக்குத் துணிந்து முயற்சி செய்யலாம்!
அவர்கள் முத்துக் குளிக்கக் கிளம்பிவிட்டார்கள்!
நானும் கடலுக்குள் போகிறேன்!


காட்டுவாசிகள் கடலில் குதித்தார்கள்!
கடல் தேவா! நீதான் எங்கள் உயிர்களைக் காக்க வேண்டும்!
முத்துச்சிப்பிகளைத் தேடினார்கள்!
ஒன்றைக்கூடக் காணோமே!
ஓசியும் கடலில் இறங்கினான்!
அவர்கள் பார்த்து விட்டால், உன்னை துண்டு துண்டாக வெட்டிவிடுவார்கள்!
ஆ! அவர்கள் என்னை கண்டுபிடிக்கவே முடியாது!

அதோ, அவர்கள் சிப்பிகளை எடுக்கிறார்கள்!
ஒரு பாறையின் பின்னே ஓசி மறைந்துகொண்டான்.
நிறைய அள்ளட்டும்!
அவர்கள் இன்னும் என்னைப் பார்க்க வில்லையே!

மூச்சுமுட்டியதும் மேலே வந்தார்கள்!
இன்று நல்ல வேட்டை!
மேலே வந்தார்கள்.
கடலில் ஒரு அதிசயம் கண்டோம்!
கடல் தேவனைப் பார்த்தோம்!
நமது தேவனையா?!
கனாக் கண்டீர்களா?
இல்லை! கண்ணால் கண்டோம்!


வாருங்கள், போய்ப் பார்ப்போம்!
ஆ! அவர்கள் மீண்டும் வருகிறார்களே? என்னைப் பார்க்கவா? இல்லை, கொல்லவா!
ஆ! கடல் தேவனேதான்!
அதிர்ச்சியுடன் திரும்பினார்கள்!
வேகமா வாங்க!

கடல் தேவனேதான்!
வாருங்கள், தலைவரிடம் சொல்லுவோம்!
அவர்கள் என்னைப் பார்த்து, பயந்துதான் ஓடுகிறார்கள்!
அதிசயம்! கடல் தேவனைப் பார்த்தீர்களா?
இத்தனை காலமா நானே பார்த்தது இல்லை!
கடல் தேவன் கோபமாக இருக்கிறான் என்று நினைக்கிறேன்! கறுப்பு முத்துகளை விற்கும்படி மாயாவி சொன்னார் அல்லவா?
கடவுளின் கோபத்தைத் தணிக்கக் காணிக்கை செலுத்த வேண்டும்!


கறுப்பு முத்துகள் எல்லாமே கடல் தேவனுக்குக் காணிக்கைதானே?
இனியும் முத்துகளை எடுக்காதீர்க
என்று கடல் தேவன் சொல்லுகிறா
எப்படிக் கூறுகிறாய்?
இனி கடலில் முத்துகளை எடுக்கமாட்டார்கள்! எல்லாம் நமக்கே!
நடந்ததையெல்லாம் மாயாவிக்குத் தெரிவிக்க வேண்டுமே!

மாயாவியைப் பார்க்க முடியாது, அழைத்தால் வருவார் என்பார்களே?
மாயாவி...
மாயாவி...
மாயாவி...
முத்து எடுக்கப் போகலாமா?
கடல் தேவன் கோபமாக இருந்தால், அதற்குக் குறி காட்டுவானே!



கடலுக்குப் போனார்கள்.
கடல் தேவனைப் பார்க்கவே பயமாக இருக்கிறது!
எல்லாருக்கும்த
ஓசி! அவர்கள் கடலுக்குக் கிளம்பிவிட்டார்கள்!
இதோ ஈட்டி தயாராகிவிட்டது!
இப்போது அசல் கடல் தேவன் போலவே இருக்கிறாய்!

ஈட்டி எதுக்கு ஓசி?
வந்து சொல்லுகிறேன், டாட்!
இப்போது சொன்னால் டாட் பயந்து ஓடிவிடுவார்!
இந்த இடத்தில்தான் நாம் கடல் தேவனைப் பார்த்தோம்!

காட்டுவாசிகள் உடைந்த கப்பல் அருகே முத்துச்சிப்பிகளைப் பொறுக்கினார்கள்!
அப்போது ஒரு ஈட்டி பாய்ந்து வந்தது!
அதைப் பார்த்தக் காட்டுவாசி அலறினான்!
ஆ!
!!
அவன் கையில் ஈட்டி பாய்ந்
அம்மா!

டுத்தவன் ஓடிவந்தான்!
என்ன... என்ன?

ஈட்டியை வேகமாக இழுத்தான்!
குறி தவறி விட்டதே!

குறி தவறினாலும் நான் எதிர்பார்த்ததுக்கு மேலேயே பலன் கிடைத்துவிட்டது!

கடல் தேவன் கோபமாகத்தான் இருக்கிறான்!
!!

கடல் தேவனைப் பார்த்தோம்!
அவன் எங்கள் மீது ஈட்டியை எறிந்தான்!

நாங்கள் உயிர் பிழைத்ததே அதிசயம்!

அதேநேரம்—
மாயாவி... மாயாவி...
மாயாவி... மாயாவி...
டோகண்டா வாசிகள் மாயாவியை அழைக்கிறார்கள். செய்தி பரவியது!
'டம்... டம்...' அடித்து காடு முழுக்கச் செய்தியைப் பரப்பினார்கள்!
!
நான் இப்போதுதானே டோகண்டா போய் வந்தேன்?

டம்... டம்... தொடர்ந்து கேட்டது!
மாயாவி... மாயாவி...
நேராகப் போ!
?
இன்னும் போ!
டோகண்டா ஆள் போய்க் கொண்டே இருந்தான்!
மாயாவி எங்கே?

பெரிய மரத்தடி.
இந்த இடந்தானா?
மாயாவியைக் காணோமே?
இங்கேயே நில்!

?!
மாயாவி...
மாயாவி...
மாயாவி வருகிறாரோ?
அதேநேரம்...
ஒரு ஆளை இரத்தப் பலி வாங்கியிருந்தால், அதிகப் பலன் கிடைக்கும்!

ஓசி கப்பலுக்குத் திரும்பினான்.
மூன்று பேரும் தப்பிவிட்டார்களா?
ஆமாம்! மூன்று பேரும் கதை கதையாகச் சொல்லுவார்கள்!
அவர்கள் உயிருக்குப் பயந்து, கறுப்பு முத்துகளை கடலில் கொண்டுவந்து போடக்கூடும்!
நீங்கள் சொன்னது சரிதான்! கடல் தேவன் எங்கள் மீது கோபமாகத்தான் இருக்கிறான்!
எங்கள் மீது ஈட்டியை எறிந்தான்!
?

கடல் தேவன் எங்கள் மீது கோபமாக இருப்பதற்கு இதுதான் அடையாளம்!
என் திட்டம் எப்படி வேலை செய்கிறது, பாருங்கள்!
அகப்பட்டால், நம் தலை போய்விடும்!
கடல் தேவனின் கோபத்தை எப்படித் தணிப்பது?
கறுப்பு முத்துகளை கடலில் கொட்டிவிடுங்கள்!
கடல் தேவன் அப்படிச் சொல்லவில்லையே?

அதேநேரம்—
மாயாவி ஏன் இன்னும் வரவில்லை?
ஆ! வந்து விட்டார்!
நீதான் என்னை அழைத்தாயா?
ஆ... ஆமாம்... உங்கள் உதவி தேவை!

தலைவரின் பேரன்தானே நீ?
நன்றாக நினைவு வைத்திருக்கிறீர்களே!
இப்போதுதானே போகண்டா வந்தேன்? அதற்குள் அங்கே என்ன நடந்தது?
முத்துக்குளிக்கச் சென்றவர்கள், கடல் தேவனைப் பார்த்திருக்கிறார்கள். அவன் கோபமாக இருக்கிறான்.
அதற்கு நீங்கள் தான் காரணம் என்கிறார்கள்?
எப்படி?

கறுப்பு முத்துகளை விற்று, எந்திரப் படகு வாங்குங்கள் என்று சொன்னீர்கள் அல்லவா?
உங்களைக் கொல்லத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்! உங்களை எச்சரிக்கத் தாத்தா என்னை அனுப்பினார்!
மிகவும் நன்றி. வா, உன் ஊருக்குப் போவோம்!
அங்கே வந்தால், உன்னைக் கொன்றுவிடுவார்கள்!
கடல் தேவனை நீ பார்த்தாயா?
இல்லை! ஆனால், முத்துக் குளிப்பவர்கள் பார்த்திருக்கிறார்கள்!

அதோ, கடலுக்குப் போகிறார்கள்!
கடல் தேவனைப் பார்க்கப்போகிறார்களா?
முத்துக் குளிப்பவர்தான் பயப்பட வேண்டும்! நாம் மீன் பிடிப்பவர்தானே?
கடல் தேவனை நினைத்தால் பயமாக இருக்கிறது.
முத்துகளை கடலில் கொட்ட கடல் தேவனின் குறி வேண்டும் என்கிறார்கள்!
உன் திட்டம் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது, ஒசி?

அவர்களுக்குக் குறி காட்டுவேன்! அப்புறம் கறுப்பு முத்துகள் முழுக்க நமக்குத்தான்!
ஓசி கடலில் இறங்கினான்!
முத்துகள் முழுவதையும் நானே கைப்பற்றுவேன்!
மீன் பிடிப்பவர்கள்
வலையில் ஏதோ பெரிதாக மாட்டியிருக்கிறது!
பெரிய சுறாவோ? திமிங்கலமோ?
ஆ... உள்ளே இழுக்கிறது!
?!

வலை அவர்களை உள்ளே இழுத்துப்போட்டது!
ஆ!

ஆ!
இதுதான் என் கோ குறி!

அதோ கடல் தேவன்!

கடல் தேவன் நம்மை நோக்கி வருகிறான்!
செத்தோம்!
ஓடுடா ஓடு!
மீனவர்கள் ஏன் இவ்வளவு வேகமாகத் திரும்பி வருகிறார்கள்? புயல்கூட இல்லையே!
கடல் தேவன் எங்கள் வலையை நாசப்படுத்திவிட்டான்!

கடல் தேவன் கோபமாகத்தான் இருக்கிறான்!
அவர்கள் சொன்னபடி, எல்லா முத்துகளையும் கடலில் கொட்டிவிட வேண்டியது தான்!
கடல் தேவன் குறி காட்டிவிட்டான்!
யார் அவர்கள்?
பொறுங்கள்!
!!!


கறுப்பு முத்துகள் விலை மதிப்பில்லாதவை!
இவனால் வந்த வினைதான் இது!
இவனைக் கொல்ல வேண்டும்!
மாயாவி மின்னல் வேகத்தில் செயல்பட்டார்!
படார்!
ஒரே அடியில் ஈட்டி நொறுங்கியது!
சடார்!

ஒரு குத்து!
கும்..
ஆ!
கடல் தேவன் வெறும் சிலை என்பது உங்களுக்குத் தெரியாதா?
உயிரோடு பார்த்தோம்!
எங்கள் மீது ஈட்டியை எறிந்தான்
சிதைந்துபோன இந்த வலையைப் பார்!
கடல் தேவன் இப்படிச் செய்யமாட்டான்! கடல் பூதமாக இருக்கும்!!
எங்கள் தேவனையா பூதம் என்கிறாய்?
குத்திக் கொல்லுடா!

அப்போது தலைவர் வந்தார்!
பொறுங்கள்!
மாயாவி நம்மோட பாதுகாவலர் என்பது உங்களுக்குத் தெரியாதா?
அவர்களை யாரோ ஏமாற்றிவிட்டார்கள்!
கடல் தேவனை அவமதித்தவனை உயிரோடு விடக்கூடாது!


நீங்கள் என் நண்பர்கள்! உங்களை சுடமாட்டேன்!
பொறுங்கள்! மாயாவி என் கைதியாக இருப்பார்!
நல்ல யோசனை தலைவரே!
முதலில் அவர்களின் ஆவேசம் அடங்கட்டும்!
கடல் தேவனை உயிரோடு பார்த்தேன் என்பது எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது!
பார்த்தவர்களில் யாரையாவது நான் சந்திக்க முடியுமா?
நீ கடல் தேவனை பார்த்தாயா?
கடல் தேவனின் கோபத்துக்கே நான் ஆளானேன்!

கடல் தேவன் என் மீது ஈட்டியை எறிந்தான்!
இதோ, ஈட்டி குத்திய காயம்!
கடல் தேவன் எங்கள் வலைகளை நாசமாக்கினான்! இதோ பாருங்கள்!

நாங்கள் கரை ஏறும்வரை கடல் தேவன் பார்த்துக்கொண்டிருந்தான்!
கடல் தேவன் எப்படியிருந்தான் என்று சொல்லமுடியுமா?
அந்தப் புதியவர்கள் அப்போது வந்தார்கள். அவர்களிடம்கூட நடந்ததைச் சொன்னேன்!

கடல் தேவன் எங்கள் வலைகளை வெட்டி எறிந்தான்!
கறுப்பு முத்துகளை கடலில் எறியக் கூறும் குறி, இது.
நாள்தோறும் கொண்டுபோய் முத்துகளை கடலில் கொட்டினோம்
முத்துகளை கடலில் கொட்டுகிறார்கள்!
நாம் அப்படியே அள்ளிக்கொள்ள வேண்டியதுதான்!
கடல் தேவனை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா, தலைவரே?
இல்லை, மாயாவி!

இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது! கண்டுபிடிக்கிறேன்!!
நீ நகரக்கூடாது!
ஈட்டியை நோக்கி மாயாவி பாய்ந்தார்.
அப்படியே நில்!
?!
கையில் கட்டியிருந்த கயிற்றை ஈட்டி முனையில் அறுத்தார்
அவனைத் தூக்கி எறிந்தார்!
ஆ!
!

மாயாவி தப்பினார்!
அவனைப் பிடியுங்கள்!
குதிரை மீது தாவி ஏறினார்!
பற, ஹீரோ!
குதிரை கடலுக்குள் பாய்ந்தது!
இன்னும் வேகம்!

நில்லுங்கள்! அவன் கடலுக்கு இரையானான்! கடல் தேவன் கொடுத்த தண்டனை, இது!
மாயாவி கடலில் நீந்தினார்!
ஹீரோ! நீ திரும்பிப் போ!!
அந்நியர்களின் படகை நோக்கி நீந்தினார்!
அங்கேதான் ஏதோ சதி நடக்கிறது!
கோவிலில் முத்துகளை எடுத்தார்கள்.
கடலில் போட வேண்டும்!
அவன் கடலு
வந்துகொண்டிருக்கிற
ஓசி, நீயும் புறப்ப



ஆ!
முதலில் பங்காளி கதையை முடிக்கிறேன்!
உயிரைப் பணையம் வைத்து முத்துகளை பறிப்பவன், நான். உனக்குப் பங்கா? இங்கேயே கிட! திரும்பி வந்து, உன்னை கவனித்துக் கொள்ளுகிறேன்!
ஓசி கடலில் இறங்கினான்!
ஓ! இவன்தான் கடல் தேவனா? இவனது கூட்டாளி எங்கே?

மாயாவி கப்பலுக்கு வந்தார்
ஓ! உங்களுக்குள் சண்டையா?
காட்டுவாசிகள் முத்துகளுடன் கடலுக்கு வந்தார்கள்.
கடல் தேவனின் கோபம் தீரவேண்டும்!
ஓசி முத்துக்களை எடுக்கத் தயாரானான்!
நான் கோடீசுவரன்!



கடலுக்குள் செல்ல வாயு சிலிண்டர் இருக்கிறதா?
என்ஜின் அறையில் இருக்கிறது!
இது போதும்!
நான் திரும்பி வந்து உன்னை விடுவிக்கிறேன்!
மாயாவி கடலில் இறங்கினார்.
அவன் கடல் தேவன் அல்ல, கடல் பூதம் என்பதை நிரூபிப்பேன்!

கடலுக்குள் நீந்தினார்!
கையும் களவுமாகப் பிடிக்க வேண்டும்!
அதேநேரம்—
பயப்படாதே! மாயாவிக்கு சாவு கிடையாது!
தாத்தா! மாயாவி கடலில் விழுந்து செத்துவிட்டார்!
அதோ பார், மாயாவியின் குதிரை!
அவரைக் காணோமே?



கடல் தேவன் அவரை விழுங்கிவிட்டான், தாத்தா!
?
மாயாவி நடமாடும் ஒரு ஆவி என்பது அவர்களுக்குத் தெரியவில்லையே!
ஓசி கடலுக்கு அடியில் போய்விட்டான்!
அதோ அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்!

இந்த இடத்தில்தான் கடல் தேவனைப் பார்த்தோம்!
கறுப்பு முத்துகளை இங்கே கொட்டுங்கள்!
அவர்கள் முத்துகளைக் கொட்ட, ஓசி, பொறுக்க முயற்சித்தான்!
கடல் அலையில் முத்துகள் சிதறிப் போகின்றனவே!
ஓ! சேற்றில் அழுந்திவிட்டனவே!

அவனது திட்டம் தவிடுபொடி! ஒரு முத்துகூடக் கிடைக்காது!
ஓசி திடீர் என்று மேலே எழும்பினான்!
படகில் மோதி, படகு கவிழ்ந்தது!
ஆ!

ஓசி மேலே வந்தான்.
அதே கடல் தேவன்!
ஒரு கிண்ணத்தில் அடைத்து முத்துகளை கடலில் கொட்டச் சொல்ல வேண்டும்!
யார் அவன்? எனக்குப் போட்டியா? அவனை தீர்த்துக்கட்டுகிறேன்!
ஈட்டியை எறிந்தான்!
சர்...

சி மீது மாயாவி பாய்ந்தார்!
நீ கடல் தேவன் அல்ல! கடல் பூதம்!!
கடலில் பேரலை!
கடல் தேவனுக்கும், கடல் பூதத்துக்கும் மோதல்!
இவனது முகமூடியைக் கிழித்தால் உண்மை தெரிந்துவிடும்!
முதலில் இவனது வாயு உருளையைக் கழற்ற வேண்டும்!

மாயாவி அவனது வாயு உருளையைக் கழற்றி எறிந்தார்.
வா, மேலே!

பலுக்குக் கொண்டுவந்தார்!
சபாஷ்! நயவஞ்சகனை பிடித்துவிட்டான்! கறுப்பு முத்துகள் கிடைத்தனவா?
அவர்கள் கடலில் விதைத்துவிட்டார்கள்!
வா, ஊருக்குள் போவோம்!
உண்மை தெரிந்தால், ஊரார் என்னை அடித்தே கொன்றுவிடுவார்கள்!

அதோ கடல் தேவன்! அதோ மாயாவி!
ஒரே குழப்பமாக இருக்கிறதே!
இத்தனை குழப்பத்துக்கும் இந்த கடல் பூதம்தான் காரணம்!
ஏமாற்றிவிட்டான்! இவனை அடித்தே கொல்ல வேண்டும்!

இவர்களை எங்களிடம் விடுங்கள்!
வேண்டாம்! தலைவர் இவர்களுக்கு நல்ல தீர்ப்பு வழங்குவார்!
இருவரையும் தலைவரிடம் ஒப்படைத்துவிட்டு, மாயாவி கிளம்பினார்!
இனியாவது மக்கள் போலிகளிடம் ஏமாறாமல் இருக்க வேண்டும்!
இருவருக்கும் தலைவர் ஏழாண்டு சிறை தண்டனை விதித்தார்!
எவ்வளவு நுட்பமாகத் திட்டம் போட்டேன்! இப்படி மாட்டிக் கொண்டேனே!!
கடல் தேவனின் கோபத்துக்கு ஆளாகிவிட்டாய்!
(முடிந்தது)

அதிரடி வீரர்

ஜோன்ஸ் எதிரடி!

துப்பாக்கி மங்கை

ஆல்காலிக் நகருக்கு அருகே டபுள்எக்ஸ் என்று ஒரு காடு. அந்தப் பகுதியைக் குமாரி கரோல் வாங்கி, அங்கு குடியேறி இருந்தாள். டேலி கூட்டம் அவளைப் பார்த்துவிட்டது.


டேலி கூட்டம் புயலாகப் பாய்ந்தது! துப்பாக்கிகள் இடியாக முழங்கின!!
டுமீல்...
அப்படியே நில்லுங்கள்! ஒரு அடிகூட அசையக்கூடாது
டுமீல்...


ஆனால், கரோல் துப்பாக்கிகளுக்கு அஞ்சக்கூடியவள் அல்ல.
ஜான்சன் தாத்தா! இந்த வெத்து வேட்டுகளை விரட்ட நீங்களே போதும்!

பொல்லாத கிழவனாக இருப்பான் போலிருக்கிறதே!
ஓடுங்கடா!!
ஓடுங்கடா!
தாத்தா! விடாதீங்க! அடித்து விரட்டுங்கள்!!

டேலி கூட்டம் தலைதெறிக்க ஓடியது!
உயிர் தப்பியதே தம்பிரான் புண்ணியந்தான்!
டுமீல்...
டுமீல்...
ஜான்சன் திரும்பி வந்தார்.
கரோல்! பயந்துவிடாதே! ஆல்காலிக், நல்ல ஊர். இவர்கள் யாரோ திருட்டுப் பயல்கள்!
நீங்கள் இருக்கும்போது எனக்கு என்ன பயம், தாத்தா?
டேலி கூட்டம் ஓடுவதை செரீப் ஜோன்ஸ் பார்த்தார்.
திருட்டுப் பசங்களை சும்மா விடக்கூடாது!


ஊருக்குள் வரும்பொழுதே இவ்வளவு மோசமான அனுபவம் என்றால் ஊரைப் பற்றி அந்தப் பெண் என்ன நினைப்பாள்? செரீப் ஆன எனக்குத்தானே கெட்ட பெயர்!


ஒரு குன்றுக்கு ஜோன்ஸ் வந்தார்.
திருட்டுப் பயல்கள் வருகிறார்கள்! சரியான பாடம் கற்பிக்க வேண்டும்!!

முதலில் வந்தவன் மீது ஜோன்ஸ் குதித்தார்!
உதவி... உதவி...
அவர்கள் இருவரும் கட்டிப் புரண்டபொழுது, ஜோன்சின் செரீப் நட்சத்திரம் கழன்று கீழே விழுந்துவிட்டது!
திருட்டுப் பயல்களா! ஊர்ப் பெயரையா கெடுக்கிறீங்க!
பின்னே வந்த ஒருவன் ஜோன்சைத் தாக்கினான்!
ஓடி வா! குதிரையில் ஏறிக்கொள்!!
டமார்!

ஜோன்ஸ் விழுந்து கிடக்க, டேவி கூட்டம் தப்பி ஓடியது!
நம் வழியில் குறுக்கிட்டவனுக்கு நல்ல பாடம் கற்பித்தோம்.
சற்று கழித்து, கரோல் அந்த வழியே வந்தாள்.
திருட்டுப் பயலில் ஒருவன், கரோல்! நான் அடித்து வீழ்த்திய ஆள்.
நீங்கள் போய்க் கொண்டு இருங்கள்.
நான் இவனை செரீப்பிடம் ஒப்படைத்துவிட்டு வருகிறேன்.
சீக்கிரம் வந்துவிடு!

ஜான்சன் தாத்தா மாடுகளை ஓட்டிக்கொண்டு போனார்.
ஹை... ஹை... ஹை... வேகமாகப் போங்கள்!
ஜோன்ஸ் மயக்கம் தெளிந்து எழுந்தார்
திருட்டுப் பயலே! நட செரீப் அலுவலகத்துக்கு! உன்னை சிறைக்குள் தள்ள வேண்டும்!
ஏய்... என்ன சொல்லுகிறாய்?
உன்னை செரீப்பிடம் ஒப்படைக்கப் போகிறேன்!
நான்தானே செரீப்!
நான் ஊருக்குப் புதிது என்பதால், என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா?

கொள்ளைக் கூட்டத்தில்தான் உன்னைப் பார்த்தேனே! நட!!
என்னைப் பார்த்திருக்கவே முடியாது!
முதலில் செரீப் அலுவலகத்துக்கு நட!
செரீப் நட்சத்திரம் இல்லாததால், தான் யார் என்பதை ஜோன்ஸ் நிரூபிக்க முடியவில்லை.
இருவரும் ஊருக்குள் வந்தார்கள்.
ஏய்! இது என்ன கூத்து! செரீப் கைதியாக வருகிறார்!!

செரீப் ஆபீசு எங்கே இருக்கிறது? இந்தக் கொள்ளைக்காரனை செரீப்பிடம் ஒப்படைக்க வேண்டும்!
அவர்தான் செரீப் அம்மணி!
இவர்... இவர்தான் செரீப்பா?
நான் சொன்னேன். நீதான் நம்பவில்லை.
கரோல் கோபத்தில் கொதித்தாள்.
எப்படி நம்பமுடியும்? உன்னைக் கொள்ளைக் கூட்டத்தில் பார்த்தேனே! செரீப் ஆக இருந்துகொண்டு, ஊரையும் கொள்ளையடிக்கிறாயா? என்னை ஏமாற்ற முடியாது.

கரோல் கோபத்துடன் குதிரையைத் திருப்பிக்கொண்டு போனாள்.
நெருப்பாக இருப்பாள் போலிருக்கிறதே!
நல்ல பெண்தான்! முன்கோபம் கொஞ்சம் அதிகம்.
அதேநேரம் டேலி கூட்டத்தார் ஓர் ஓட்டலில் கூடினார்கள்.
அந்தப் பெண்ணை எப்படியும் பிடிக்க வேண்டும். அதுக்கு நீதான் சரியான ஆள். உனக்குக் குழந்தை முகம்.
எப்படியாவது அவளிடம் நீ வேலைக்குச் சேர்ந்துவிடு!

அவர்கள் பேசிக்கொண்டு இருந்தபொழுது கரோல் அந்த வழியே வந்தாள்.
அதோ கரோல் போகிறாள். இப்பொழுதே நமது நாடகத்தை நடத்தலாம்!
பேபி! நீ முதலில் போ...


பேபி உடனே கிளம்பினான்.
நீ போய் ஒழுங்கா நடி. நாங்கள் ஐந்து நிமிடத்தில் வருகிறோம்.

பேபி, கரோலைப் பின்தொடர்ந்து போனான்
ஊரைத் தாண்டிப் போனபின்பு நமது வேலையைக் காட்டுவோம்.
அடுத்த நிமிடத்தில் டேவி கூட்டம் கிளம்பியது.
நான் சொன்னதை மறந்துவிடாதீர்கள். புறப்படுங்கள்.
அவர்கள் போவதை ஜோன்ஸ் பார்த்தார்.
திருட்டுப் பயல்கள் மீண்டும் வந்துவிட்டார்களா? எங்கே போகிறார்கள்?
ஜோன்சும் கிளம்பினார்.
விடக் கூடாது!
இந்த முறை அவர்களைப் பிடித்துவிட வேண்டும்!!

பேபி, கரோலை நெருங்கிவிட்டான்.
குட்மார்னிங் மேடம்.
ஆல்காலிக்குக்கு புதிதாக வந்திருப்பவர் நீங்கள்தானே?
நான் குறிதவறாமல் துப்பாக்கி சுடுவேன். எனக்கு வேலை கொடுப்பீர்களா?
யோசித்துச் சொல்லுகிறேன்.
டேலி கூட்டம் பாய்ந்து வந்தது!
அதோ போகிறார்கள். சீக்கிரம் வாருங்கள்!

கரோலும், பேபியும் அவர்களைப் பார்த்தார்கள்.
கொள்ளைக்காரர்கள்!
கைகளை உயர்த்து! இல்லாவிட்டால், சுட்டுவிடுவேன்!
இந்தப் பயல்கள்தான் காலையில் என்னை வழிமறித்தவர்கள்!
பயப்படாதீர்கள் மேடம்! நான் பார்த்துக்கொள்ளுகிறேன்!
டேலி மீது பேபி பாய்ந்தான்!
தனியா வர்ற பெண்ணிடம் கலாட்டாவா பண்ணுகிறீர்கள்?


இருவருக்கும் மோதல் ஏற்பட்டது.
பிரமாதமா நடிக்கிறாய்! உம்... தொடரட்டும்!
பெண்களைக் காப்பாற்றுவதுதான் என் வேலை! அயோக்கியப் பயலே!
டேலி கூட்டம் திரும்ப ஓடியது!
பொட்டைப் பசங்களா! எங்கேடா ஓடுறீங்க?
தைரியமிருந்தால் வாங்கடா!
அகப்பட்டால் கடித்துக் குதறிவிடுவான்! ஓடிவாருங்கள்!!



டேவி கூட்டத்தினர் ஆளுக்கு ஒரு பக்கமாக ஓடினார்கள்.
ஓடுங்கள்! ஓடுங்கள்! இல்லாவிட்டால், உயிருக்கே ஆபத்து!
ஜோன்ஸ் விரைந்து வந்தார்.
அந்தப் பெண்ணைத் தாக்கிவிட்டு ஓடுகிறார்கள் போலிருக் கிறதே!
ஜோன்சை கரோல் பார்த்தாள்.
திருடர்கள் ஓடிய பிறகு நீங்கள் வருகிறீர்களா?
இவனும் ஒரு திருடன்தான்!

டேய்! நீயும் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவன்தானே?
இவன் எனக்கு உதவியவன்.
நீங்கள் மரியாதையாகப் போய்விடுங்கள்.
உண்மை தெரியாமல் பேசாதே!
கரோலுக்குக் கோபம் வந்தது.
எனக்கு எல்லாம் தெரியும். நீதான் கொள்ளைக்காரன். இவர், கொள்ளைக் கூட்டத்திடம் இருந்து என்னைக் காப்பாற்றியவர். இனி இவரே என் மெய்க்காப்பாளர்!
பேபி வெற்றிப் புன்னகை பூத்தான்.
அப்படியானால் எனக்கு வேலை கிடைத்துவிட்டதா?
ஆமாம்!



கரோலும் பேபியும் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.
சின்னப் பெண்! வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கிறாள்!
இவளைப் பாதுகாக்க வேண்டியது என் கடமை! கொள்ளைக் கூட்டத்தைப் பிடித்து உள்ளே போட்டால்தான் அந்தப் பெண்ணைக் காப்பாற்ற முடியும்.
ஜோன்ஸ் ஊருக்குள் திரும்பினார்.
அதேநேரம், ஒரு குன்றின் மீது டேலி கூட்டம் காத்து இருந்தது.
நம் திட்டப்படியே எல்லாம் நடக்கிறது. இன்று இரவு அவளையும் அவளது மாடுகளையும் கொள்ளையடித்துவிடலாம்!


ஒரு பயண விடுதிக்கு இருவரும் வந்தார்கள்.
தாத்தா! இவர் பெயர் பேபி. நமக்குப் புதிய உதவியாளர்
நல்ல பையன்தானா? உள்ளே வாருங்கள்.
மந்தையை இங்கே அடைத்துவிட்டேன். இது நமக்கு வசதியான இடந்தான்.
பகல் முழுவதும் புல், தண்ணீர் இல்லாமல் ஓட்டி வந்திருக்கிறீர்கள். இப்பொழுது மேய்ச்சலுக்கு விட்டால் என்ன? நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!
நல்ல யோசனைதான்!
ஆனால், காவலுக்கு ஓர் ஆள் போதாது. நாம் எல்லாரும் போவோம்!
உங்களுக்கு வீண் சிரமம் வேண்டாம் என்று நினைத்தேன். நீங்களும் பகல் முழுக்கப் பயணம் செய்திருக்கிறீர்களே!

மாலை நேரம். மந்தையை மேய்ச்சலுக்கு ஓட்டிச் சென்றார்கள்
இரவும் இங்கேயே விட்டுவிடலாம் போலிருக்கிறதே!
பாதுகாப்பான இடந்தான்.
இரவில் இங்கேதான் மந்தையை விடுவார்கள் என்று நினைக்கிறேன்.
டேலி கூட்டம் பார்த்துக்கொண்டே இருந்தது!


இருட்டிக்கொண்டு வருகிறது. மந்தையை ஒரே இடத்தில் அடைப்போம். நான் காவலுக்கு இருக்கிறேன்.
மந்தையை ஒரே இடத்தில் சேர்த்தார்கள்.
கரோல்! நாம் எல்லோருமே இங்கேயே இருந்துவிட்டால் என்ன?
இரவு முழுக்க நீங்கள் ஏன் இங்கே இருக்க வேண்டும்? விடுதிக்குப் போய் ஓய்வு எடுங்கள்!

குன்று வழியே குதிரைகள் வருவதை பேபி பார்த்தான்.
யார் அது? நம்ம ஆட்கள் இந்த வழியே வரமாட்டார்களே! செரீப் ஆக இருக்குமோ?
ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிப்போம்!
அதேநேரம் பேபி, தாத்தாவிடம் செரீப்பைப் பற்றி தூபம் போட்டான்.
தாத்தா! அதோ பாருங்கள், கொள்ளை கூட்டம்!! கரோலை வழிமறித்த அதே ஆட்கள்!
அப்படித்தான் தெரிகிறது.

மூவரும் குதிரைகளில் பாய்ந்து ஏறினார்கள்!
உங்கள் வீரத்தைக் காட்டுங்கள் தாத்தா
அவர்கள் மீண்டும் வராத அளவுக்கு அடித்துத் துரத்த வேண்டும்!
தாத்தா ஜான்சனும், கரோலும் வேகமாக முன்னே போக, பபி பின்தங்கினான்!
இனி இந்தப் பக்கமே அவர்கள் தலைவைத்துப் படுக்கக்கூடாது!
அவர்கள் ஒருவருக்கு ஒருவர் சுட்டுக்கொண்டு சாகட்டும்! நாம் நம் வேலையைப் பார்ப்போம்!
பபி பின்னே திரும்பிச் சென்றதை அவர்கள் இருவருமே கவனிக்கவில்லை.

எதிர்பாராத தாக்குதலால் ஜோன்ஸ் திகைத்தார்.
செரீப்! அவர்கள் தாக்குகிறார்கள்! என்ன செய்வது?
டுமீல்...
டுமீல்...
திருப்பிச் சுடாதீர்கள். அவர்கள் அந்த அப்பாவிப் பெண்ணும், கிழவனும்!
கைகளை உயர்த்துங்கள் வீணாக இரத்தம் சிந்துவதைத் தடுக்க இதுதான் வழி!

ராலும், தாத்தாவும் நெருங்கி வந்தார்கள்.
தே செரீப் கூட்டந்தான்! இவர்களை சும்மா விடக்கூடாது!
இவர்களை சுட்டுத்தள்ளலாம் என்று நினைத்தேன். இப்படி சரண் அடைந்துவிட்டார்களே!
ன்னும் தவறாகவே நினைக்கிறாய்.
கொள்ளைக்காரர்களிடம் இருந்து உன்னைக் காப்பாற்றவே நான் வந்தேன்!
நயவஞ்சகப் பேச்சால் என்னை ஏமாற்ற முடியாது!

அதேநேரம் கொள்ளைக்காரர்கள் மந்தையை விரட்டிப் போனார்கள்
அவர்கள் திரும்பி வருமுன் நாம் ஓட்டிப் போய்விட வேண்டும். சீக்கிரம்! சீக்கிரம்!!
மாடுகளை யாரோ ஓட்டிப் போகிறார்களே?
இப்பொழுதாவது என்னை நம்புகிறாயா?

நம்ம பின்னே வந்த பேபியைக் காணோமே! எல்லாம் அவன் வேலைதான் போலிருக்கிறது!
முதலில் மந்தையை மீட்க வேண்டுமே தாத்தா!
டுமீல்!
கவலைப்படாதே, கரோல்! என் ஆட்களை ஏற்கனவே அங்கே அனுப்பியிருக்கிறேன்!

துங்கியிருந்த செரீப் ஆட்கள் திடீர் என்று எழுந்தார்கள்!
ஹை... ஹை.... ஹை... திருப்பி விரட்டுங்கள்!
டுமீல்...
டுமீல்...
டுமீல்...
துப்பாக்கிக் குண்டுகள் முழங்க, மாடுகள் பயந்து பின்னே திரும்பி ஓடின!
அந்தப் பயல்களை தப்ப விடக்கூடாது!

மாடுகள் பாய்ந்துவர டேவி கூட்டம் பின்னோக்கி ஓடியது!
ஓடு... ஓடு...
நம்மை மிதித்தே கொன்றுவிடும்!
பாதுகாப்பாக ஒரு மரத்தில் ஏறிக்கொண்டார்கள்.
சீக்கிரம் ஏறு!
ஒரு கை கொடு!!

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு வெளியிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ணி பிரஸ், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007. ஆசிரியர்: அ.மா. சாமி, 6, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.

ராணி
முத்து

வெளிவந்துவிட்டது!

பரபரப்பு எழுத்தாளர்

அனுராதா ரமணன்

ஊமை மனிதர்கள்

புதுமையான நாவல்!

விலை ரூ. 6தான்

இப்போது எல்லாக் கடையிலும் கிடைக்கிறது!

"ராணி முத்து", சென்னை-600 007.

அதிரடி வீரர்
ஜோன்ஸ் எதிரடி!
ராணி
காமிக்ஸ்
துப்பாக்கி மங்கை
வண்ணப் படக்கதை
இரண்டு படக்கதை
ரூ.5